**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.**

<u>அசல் வழக்கு எண். 80/2018</u>

நாள் 02.11.2023.

பெயர். கலாவாதி க/பெ. தயாளன்

வா.சா.1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.

1. 1ம் பிரதிவாதியின் கணவர் சண்முகம் 2ம் பிரதிவாதியின் கணவர் பச்சையப்பன் ஆகியோர் என் உடன்பிறந்த மூத்த சகோதரர்கள் என்றால் சரிதான். என் தந்தை பெயர் சுப்பிரமணி மற்றும் தாயார் பெயர் இந்தராணி என்றால் சரிதான். வழக்கு சொத்து ஆதனூர் கிராமத்தில் உள்ளது. வழக்கு சொத்தில் வீடு மற்றும் காலி இடம் ஆகியவை உள்ளது.

2. மேற்படி வீடு எத்தனை வருடங்களாக இருக்கிறது என்றால் நான் பிறப்பதற்கு முன்பிலிருந்தே இருக்கிறது. மேற்படி வீடு ஒட்டு வீடு ஆகும். தற்போது நான் அந்த வீட்டில் குடியிருந்து வருகிறேனா என்றால் ஆம். நான் மேற்படி வீட்டில் எப்போதுயிருந்து குடியிருந்து வருகிறேன் என்றால் நான் ஆரம்பத்திருந்து அங்கு தான் குடியிருந்து வருகிறேன். என்னை எந்த ஊரில் திருமணம் செய்து கொடுத்தர்கள் என்றால் ராணிபேட்டையில் திருமணம் செய்து கொடுத்தார்கள் நான் வீடு இல்லை என்பாதால் மேற்படி வீட்டிலே குடி வந்து விட்டேம். என் மக்கள் எந்த ஊரில் படித்தார்கள் என்றால் ஆதனுாரில் தான் படித்தார்கள்.

3. நான் ஆதனுாரில் திருமணம் ஆன பின்பு குடியிருந்து வருவதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு தாக்கல் செய்த இரண்டு வருடங்களுக்கு முன்பாக தான் ஆதனுாரில் உள்ள வீட்டில் குடியிருந்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் ஆதனுாரில் குடி வந்த போது என் தாய் தந்தையார் ஆதனுார் வீட்டில் தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான் என் பெற்றேரை நான் தான் பாரமரித்து வந்தேன். நான் ஆதனுார் வந்த பிறகு வீட்டின் ஒரு பகுதியில் நானும் மற்றொரு பகுதியில் என் பெற்றேரும் தனி தனியாக சமைத்து சாப்பிட்டு வந்தேம் என்றால் சரியல்ல நான் தான் சமைத்து கொடுத்தேன்.

4. என் தாய் இறந்து விட்டார் என்றால் சரிதான். என் தாய் உயிருடன் இருக்கும் போது என்ன வேலை செய்து வந்தார் என்றால் நிலத்தில் கழினி வேலை செய்து வந்தார். என் அம்மா அப்பா சேர்த்து வேலையை பார்த்து கொண்டர்களா என்றால் நானும் அவர்களுடன் சேர்த்து வேலை பார்த்து வந்தேன். நான் கிரையம் வாங்கியதாக தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ2 கிரைய ஆவணம் எந்த வருடம்

வாங்கினேன் என்றால் 2017ம் ஆண்டு ஆகும். என் தாய் 11.01.2018ம் தேதியான்று இறந்துவிட்டர் என்றால் சரிதான். என் தாயார் எப்படி இறந்தார் என்றால் அவருக்கு புற்றுநோய் இருந்தது அதனால் இறந்துவிட்டார். என் தாயாருக்கு எத்தனை வருடமாக சிகிச்சையில் இருந்தார் என்றால் 2 வருடங்களாக சிகிச்சையில் இருந்தாார்.

5. வா.சா.ஆ2 கிரையப்பத்திரம் எழுதி கொடுத்த தேதியான்று என் தாயார் உடல் நிலை சரியல்லமால் சுயநினைவு இல்லமால் இருந்தார் என்றால் சரியல்ல. கிரைய தொகை எவ்வுளவு கொடுத்தேன் என்றால் என் தாயரை நான் மருத்துவ மனைக்கு அழைத்து சொன்று சிகிச்சை கொடுத்தால் கடனை கொடுத்துவிடுங்கள் என்று நிலத்தை எனக்கு எழுதிவைத்தார். கிரைய தொகை என பேசி ஏதேனும் முடிவு செய்தேமா என்றால் இல்லை. வா.சா.ஆ2 கிரையப்பத்திரத்தில் காலி இடம் என்று தான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான் முதலில் அவ்வாறு எழுத சொன்னார்கள் பணம் கட்டி சொன்னார்கள் கட்டிவிட்டேன்.

6. உண்மையிலேயே என் தாயாரிடமிருந்து நான் கிரையம் வாங்கியிருந்தால் சரியாக பத்திரம் எழுதியிருப்பேன் என்றும் என் தாயாரை கட்டயாப்படுத்தி எழுதியதால் தவறாக கிரையப்பத்திரம் எழுதியுள்ளேன் என்றால் சரியல்ல. என் தாயார் 08.04.2008ம் தேதியான்று ஜெயசந்திரன் என்பவருக்கு ஒரு பொது அதிகார பத்திரம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்படி ஜெயசந்திரன் 27.04.2015 தேதியான்று ஒரு தங்கமணி என்பவருக்கு சொத்தை விற்றுவிட்டார் என்றால் சரியல்ல இருவரும் சகோதரர்கள் ஆவார். தங்கமணிடமிருந்து பிரதிவாதிகள் இருவரும் 07.02.2018 தேதியான்று கிரையம் வாங்கிவிட்டர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கிரையம் வாங்கியிருந்தலும் என் பெற்றோர் பிரதிவாதிகளின் மாமியார் மற்றும் மாமானார் என்பதால் மூன்று தங்க வைத்துயிருந்தார்கள் என்றால் சரியல்ல.

7. என்னையும் பிரதிவாதிகள் ராணிபேட்டையிலிருந்து வந்துவிட்டதால் மூன்று மாதங்கள் தங்க வைத்துயிருந்தார்கள் என்றால் சரியல்ல. ஜெயசந்திரன் 2015ம் வருடம் தங்கமணியிடம் கிரையம் கொடுத்துவிட்டதால் கணக்குவழக்குகளை என் தாயாரிடம் ஒப்படைந்துவிட்டார் என்றால் சரியல்ல. என் தாயார் சுயநினைவுடன் இருக்கும் போது மேற்படி விவரத்தை என்னிடம் தெரிவித்துயுள்ளார் என்றாலும் நான் அதனால் தான் மேற்படி கிரையப்பத்திரத்தை ஏற்படுத்திவிட்டேன் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் கிரையம் வாங்கிய பின்பு 2018 வருடம் பட்டாவை அவர்கள் பெயரில் மாற்றிக்கொண்டர்கள் என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் தாக்கல் செய்த பதிலுரையை கேட்டு தெரிந்து கொண்டேனா என்றால் பிரதிவாதிகள் வீடு அவர்களுடையது என்று பதில் தாக்கல் செய்துள்ளார்கள்.

8. நான் இவ்வழக்கை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் வீடு என்னுடையது என்று தாக்கல் செய்துள்ளேன். தடையுத்தரவு ஏதேனும் கேட்டுயுள்ளோன என்றால் இல்லை. வழக்கு சொத்து என்னுடையது என்று பரிகாரம் கோரமால் தாக்கல் செய்துயிருப்பதால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால் சரியல்ல. நான் கிரையம் வாங்கியது செல்லாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த அசல் வழக்கு எண்.80/2018யை தள்ளுபடி செய்துயும் அசல் வழக்கு எண்.165/2018யை அனுமதித்து தீர்ப்பு அளிக்கவேண்டுமென்றால் சரியல்ல.

(மறுவிசாணையில்லை)

/ ஒப் // பி.டி. சதீஷ்குமார்,

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

ஆரணி, திருவண்ணாமலை மாவட்டம்.